# பாரதிதாசனின் கலையும் பண்பாடும்

**முனைவர் ஆர். நிர்மலா தேவி**
**இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர்**
**தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)**
**ஈரோடு - 638 012**
**மின்னஞ்சல் : prnirmaladevi@gmail.com**

**10**

**ஆய்வுச்சுருக்கம்**

பண்பாடு என்பது குறிப்பிட்ட இனக்கூட்டத்தின் பழக்கங்களையும், வழக்கங்களையும் குறிக்கும். இவை குறிப்பிட்ட மக்களின் உணவு, உடை உறையுள், ஆண்பெண் உறவுமுறை, குடும்பம், மொழி, இலக்கியம், பொது இடங்களில் மக்கள் நடத்தும் கொள்ளும் முறை முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு சுட்டப்படும். இந்த சமுதாயத்தில் புதுக்கவிதை மரபியல் வலம் வந்த பாரதிதாசனின் படைப்புகளில் அழகு குடி கொண்ட பாங்கினையும் பகுத்றிவினை வெளிப்படுத்திய தன்மையையும், பெண்ணியத்திற்று குரல் கொடுத்த சாரத்தையும் இன்றைய இளைய தலைமுறையினருக்கு எடுத்துக் கூறுகிறார்.

சமுதாயத்தின் கடந்த கால வரலாற்றை நிகழ் காலத்தோடு தொடர்பு படுத்தியும் தம்காலச் சமுதாய நிகழ்ச்சிகளைப் பகுத்தறிவு நோக்கில் ஆராய்ந்து முடிவெடுத்து, இலக்கிய சுவையேற்றித் தமிழ்மணம் கமழ உயர்தனிக் கவிதைகளை உலாச் செய்தவர் தான் புதுவைக் குயில், தமிழ்த் தென்றல், இலக்கியச் செம்மல், புரட்சிக்கவி பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள். புரட்சிக் கருத்துக்களைப் பாடும் போது காட்டுத் தீயாகக் கனலும் பாவேந்தர் தமிழைப் பாடும் பொழுது உருகும் தங்கமாய், சுடரும் விண்மீனாய்த் திகழ்கிறார். தன்மானக்கருத்துக்களை வீராவேசத்தோடு வழங்கும் பாவேந்தர் இயற்கையைப் பாடும் போது பூவிதழின் மென்மையும், தேனின் இனிமையும், நிழலின் தண்மையும் கொண்ட செந்தமிழ்ச் சொற்களை கையாளுவதில் நுண்திறன் உடையவர். ஒன்பது சுவைகளையும் நயம்படச் சித்திரிக்கும் ஆற்றல் வாய்ந்த கவிஞர், கம்பனுக்குப் பிறகு பாவேந்தர் பாரதிதாசனே என்றால் அது உண்மையே அன்றி வெறும் புகழ்ச்சியில்லை.

**திறவுச்சொற்கள்** - காட்டுத் தீயாகக் கனலும் பாவேந்தர் - **அழகோவியம்-** சாதி சமயங்களால் மண்டிக் கிடந்த சமுதாயத்தினைப் பகுத்தறிவால் மாற்றியவர் – **பெண்ணியம்-** சிகரத்தில் சஞ்சரிப்பதற்காக புதிய ஆத்திச்சூடி

**பாரதிதாசனின் அழகோவியம்**:

ஓவியர்கள் திரையில் தீட்டுவதையும், சிற்பிகள் கல்லில் செதுக்குவதையும் கவிஞர்கள் சொற்களிலேயே தீட்டிக் காட்டி விடுகிறார்கள். நல்ல கவிஞர்களின் கைகளிலே சொற்கள்

தூரிகைகளாகப் பயன்படுகின்றன. அச்சொற்களைக் கொண்டு அவர்கள் அற்புதமான காட்சிகளைப் படைத்துக் காட்டிவிடுகிறார்கள். சொற்களை ஆளும் தனித் திறமையால் அவர்கள் என்றும் நிலைத்த அழகுக் காட்சிகளைத் தீட்டி விடுகிறார்கள். அழகையைப் பாடுவதற்காகவே பிறப்பெடுத்தவர் பாரதிதாசன். அழகின் சிரிப்பில் 20 தலைப்புகளின் மூலம் பாரதிதாசன் நம் கண்முன் சிறந்த ஓவியராகக் காட்சியளிக்கிறார். அழகு எங்கேங்கே காட்சி தருகிறது.

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்!
கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்
சோலையிலே மலர்களிலே தளிர்கள் தம்மில்
தொட்ட இடம் எலாம் கண்ணில் தட்டுப் பட்டான்

உலகத்தில எத்தனை எத்தனையோ நம் வாழ்வில் இன்பத்தை அளிப்பதற் கென்றே காத்திருக்கின்றன என்று அவர் தாம் கண்ட அழகினைப் பட்டியல் இடுகிறார். கடலினை வருணனைச் செய்யும் போது கடற்கரை மெத்தை, மெத்தையின் நிறம் கீரியின் உடல் வண்ணம். கடற்பரப்பினை நோக்கி வரும் அலை கல்வி கற்கும் இளைஞனைப் போல் பூரிப்பால் மேலே ஏறும், கீழே வீழும், புரளும் இளைஞர்களின் கவலையற்ற இன்ப வாழ்க்கை போலென உவமிக்கிறார். மேலும்

**புரட்சிக் கப்பால் அமைதி பொலியுமார்! அது போல்ஓரக்**
**கரையினில் அலைகள் மோதிக் கலகங்கள் விளைக்கும்; ஆனால்**
**அருகுள்ள அலைகட் கப்பால் கடலிடை அமைதி யன்றோ!**

என்னே! நெஞ்சைத் தொடும் வரிகள். அழகின் சிரிப்பில் மட்டுமின்றி பிற படைப்புகளிலும் அழகினை வடித்துள்ளார். புரட்சிக்கவியில் புதுமைக் கருத்தாக வெளிப்படுகிறது. நம் மனதினைத் தழுவும் தேவ கானங்கள் பாரதிதாசனின் அழகோவியம்.

**பாரதிதாசனின் பகுத்தறிவு** :

சாதி சமயங்களால் மண்டிக் கிடந்த சமுதாயத்தினைப் பகுத்தறிவால் மாற்றியவர். பெரியார் பாசறையிலிருந்துப் பகுத்தறிவுக் கருத்துக்களை இலக்கியமாக்கி மக்களின் சிந்தனையைத் தூண்டியவர். ‘பகுத்தறிவு என்பது காரணத்தினை அடிப்படையாகக் கொண்டு விளக்குவது. கருத்து, நம்பிக்கை, நடத்தை ஆகியவற்றை முதன்மை ஆதாரமாகக் கொண்டு ஏற்றுக்கொள்ளும் முறையாகும்.” The American College Dictionary – p.1005 ) சிந்திக்கும் தன்மையின் கூர்மையே பகுத்தறிவு (வே.ஆனைமுத்து - பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் ப.1114) என்று பெரியார் பகுத்தறிவுக்கு விளக்கம் அளித்துள்ளார். அறிவில் நம்பிக்கை வைக்காமல் சாத்திரங்கள் புராணங்கள் முதலியவற்றை அப்படியே ஒப்புக்கொண்டு ஆராயாமல் நடப்பது சமயச் சார்புள்ள அறிவுக்கோட்பாடு (வே.ஆனைமுத்து- பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் ப.1254) அதனை பாரதிதாசன்,

**எழுப்புச்சுவர் உண்டெனில் எழுப்பியவன் ஒருவனுண்டே**
**இல்வுலகு கண்ட நீ நானும் உண்டென அறிக**
(பாரதிதாசன் கவிதைகள் - தொகுதி – ப.153)

என்ற வரிகள் இக்கோட்பாட்டினைப் புலப்படுத்தும். 'நம்பிக்கை அடிப்படையில் ஒன்றை ஏற்றுக்கொள்ளாமல் காரண காரியத்தைத் தெரிந்து அதன்படி நடப்பதும், காரியங்களை அறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்ப்பதும் சயமச் சார்பற்ற அறிவுக்கோட்பாடு" (வே.ஆனைமுத்து- பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் ப.1102)

இக்கோட்பாட்டில் ஆராய்ச்சி உண்டு, சிந்தனை உண்டு, கடவுள் உண்டு என்றால் அதனை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதைக் காட்டு என்று கேட்பது பாரதிதாசனின் கோட்பாடு,

**"கனமான கடவுளேஉனைச்செய்த சிற்பி எவன்?**
**காட்டுவீர்" என்றவுடனே**
**" கடவுளைக் காண்கிலேன்! அறிவியக்கப் புலமை**
**கண்ட பாரத தேசமே!** (பாரதிதாசன் கவிதைகள் - தொகுதி – ப.183)

உலகில் மனிதனே முதன்மையானவன் சிறந்தவன் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு பாடுவது மனித முதல்வாதம். மனிதனுக்குச் சிறப்புத் தந்து மனிதனையே அடிப்படையாகக் கொண்டு மனித நலத்தினைக் கருத்தில் கொண்டு பாடுவது பாவேந்தரின் கொள்கை. மானிட சத்கி என்ற கவிதையில்

**மானிடன் வாழ்ந்த வரைக்கும் - இந்த**
**வையத்திலே அவன் செய்தவரைக்கும்**
**மானிடத் தன்மைக்கு வேறாய் - ஒரு**
**வல்லமை கேட்டிருந்தால் அதைக்கூறாய்**
**(பாரதிதாசன் கவிதைகள் - தொகுதி – ப.145)**

என்ற வரிகள் புலப்படுத்தும். மனித வளம் முழுமைக்கும் அறிவே அடிப்படை என்பது தெளிவு படுத்தப்படுகிறது. மனிதன் அறிவினால் தோன்றுவது கருத்து. அறிவோடு பொருந்தி வெளி வருகின்ற எண்ணங்கள் கருத்துக்களாக மலரும். மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையாய் அமைந்த கருத்துக்களை நீக்கி, வளர்ச்சிக்குரிய கருத்துக்களைக் கூறுவதே முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். மக்களை அறிவு நெறியில் செலுத்தப் புதுக்கருத்துக்கள் தேவை என்கிறார் பாவேந்தர்.

**புதுநாளின் போக்குக்குப் பழஞ்சட்ட வரிகள் பொருந்தாவிட்டால்**
**எதனாலும் ஒரு நொடியும் தாழ்க்காமல் - எழில் மக்கள் எண்ணம் ஆய்ந்து**
**புதுக்காத மன்னவனைப் பொறுக்காது தாய்நாடு!( குறிஞ்சித்திரட்டு ப.199)**

அறிவால் தோன்றிய கருத்துக்கள் கொள்கைகளாக மலர்ந்து செயல்; வடிவம் பெறும் போது தான் ஆக்கமும் சிறப்பும் பெறுகின்றன. கருத்துக்களைச் செயற்படுத்தும் களங்களாக மனிதனும் அவனோடு தொடர்புடைய பிற துறைகளும் அமைந்துள்ளன. நிறைவான ஒன்றைப் போற்றிப் புகழுதலும் குறையுடையதைத் திருத்திச் செம்மைப்படுத்துவும் செயற்பாடாகும். அறிவால் குறை கண்டு, சிந்தனையால் குறை யறிந்து, சீர்திருத்தத்தால் குறை நீக்குவது செயப்பாட்டு அழகியலின் முத்திறச்செயல்களாக அமையும். மக்கள் அறிவு நிலையில் நிற்கச் சாதி,மத,பேத மூட வருக்கங்களை ஒழித்துப் புதிய உலகு படைக்க வேண்டும். இந்தப் புத்துலகு தன்மான உலகாக அமைய வேண்டும். தன்மான உலகில் தான் மனிதன் முன்றேற்றம் காணமுடியும் என்று பகுத்றிவு விதையினை மக்கள் மனதில் விதைத்தவர் பாவேந்தர்.

**இருட்டறையில் உள்ளதடா உலகம்; சாதி**
**இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே (பாண்டியன் பரிசு ப.99)**

மக்களிடையே சாதியைப் பரப்பி வேறுபாடுகளை வளர்க்கத் துணை புராணங்களும் இதிகாசங்களுமே அடிப்படைக் காரணமாக அமைந்தன என்பது தெளிவு இதனைச் சஞ்சீவிப் பர்வதத்தின் சாரல் கவிதையில் பாவேந்தர்,

**பேதம் வளர்க்கப் பெரும் பெரும் புராணங்கள்!**
**சாதிச்சண் டைவளர்க்கத் தக்க இதிகாசங்கள்!**
**(சஞ்சீவிப் பர்வதத்தின் சாரல் பாரதிதாசன் கவிதை ப.6)**

பொதுவுடமைச் சமுதாயத்தினை உருவாக்க வேண்டும் என்று கனவு கண்டார். தொழிலாளர் முதலாளி சமத்துவத்தினை உருவாக்க வேண்டும் என்று வீரமுழக்கத்தோடு சமத்துவக் கவிதையாக உலகப்பன் பாட்டைப் படைத்தார்.

**ஓடப்ப ராயிருக்கும் ஏழியப்பர் உதையப்ப ராகிவிட்டால்**
**உதையப்ப ராகிவிட்டால் ஓர் நொடிக்குள்**
**ஒடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி**
**ஒப்பப்பர் ஆய்விடுகிறார் உணரப்பா நீ !**

உதைப்பதென்றால் அதற்கு ஆண்மை வேண்டும். எதற்கும் அஞ்சாத மறத்தன்மை உள்ளத்தில் பூக்க வேண்டும். சாதிவெறி, மதவெறியோடு செயற்படுபவனைத் தாக்க அதற்கு நிகரான தன்மான வெறி தோன்ற வேண்டும். அந்த இனமான வெறியோடு தாக்கினால் தான் மேல் சாதியுணர்வை அழிக்க முடியும் என்ற தீர்க்கமான மனஉணர்வோடு இளைஞர்களுக்குத் தன்மான உணர்வை உண்டாக்குகிறார். தனிமனித நிலை, சமுதாய நிலை ஆகியவற்றிலுள்ள குறைகள் நீங்கக் கல்வி

இன்றியமையாதது என்று அறைகூவல் விடுகிறார். இதனையே பாரதிதாசன்

**எல்லோர்க்கும் நல்லின்பம்**

**எல்லார்க்கும் செல்வங்கள்**

**இல்லாமை என்னும் பிணி**

**இல்லாமல் கல்வி நலம்**

என நாட்டின் நலன் விளங்கிட தமது கருத்தியல்பினைப் பதிவு செய்கிறார். தன் பெண்டு தன் பிள்ளை சோறு வீடு சம்பாத்யம் இவையுண்டு தானுண்டென்பேன் சின்னதொரு கடுகு போல் உள்ளங் கொண்டோன் என்று கூறியவர் இறுதியில் தூயஉள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம் தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம் தனிலன்றோ இன்பம் என்று உலக ஒற்றுமைக்கு வழி கூறுகிறார்;.

**பாரதிதாசனும் பெண்ணியம் :**

அடக்கம், பொறுமை, தியாகம், பிறர்நலம், இரக்கம், அழகு, ஒப்பரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று பெண்மை எனப்படும்' (திரு.வி.க. பெண்ணின் பெருமை ப.12) என்கிறார் திரு.வி.க. பாரத நாட்டையும் பாய்ந்திடும் ஆற்றையும் பெண்களாக போற்றியவர்கள் தமிழர்கள். உலக அறியாமை எனும் இருளில் உழன்று அல்லற்படாமல் அறிவொளி பெற்றுத் திகழ வேண்டுமெனில் பெண்கள் அறிவை வளர்க்க வேண்டும். ஞானமும், நல்லறமும், வீரமும் இல்லாத பெண்கள் நல்ல மக்களைப் பெற்றுத் தர முடியாது. கல்வியில்லாத பெண்கள் களர் நிலம் அங்கே புற்கள் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைவதில்லை என்று நல்லெண்ணம் கொண்ட இளைய தலைமுறையினர் உருவாக பெண்களுக்குக்கல்வி அவசியம் என்கிறார். பாரதியாரின் புதுமைப்பெண்ணுக்கும் பாரதிதாசனாரின் புதுமைப் பெண்ணுக்கும் நிறைய வேறுபாடு உண்டு. பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதுதம் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் - எட்டும் அறிவினில் ஆணுங்கிங்கே பெண் இளைப்பில்லை காண்! ஏன்று அறைகூவலுடன் விடுதலை மகளிரெல்லாம் வேட்கை கொண்டனம், வெல்லுவம்! என்று முழங்குகிறாள்; பாரதியாரின் புதுமைப்பெண். ஆனால் பாரதிதாசனானின் பெண் அதிகம் பேசவில்லை. அவள் சார்பில் கவிஞர் பேசுகிறார். அவள் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பேசுகின்றன. பெண் பழைய பெண்ணாகத் தான் இருக்கிறாள். அவளைக் காணும் தம் விழிகளிலே வெந்நீரையும் இதயங்களிலே செந்நீரையும் பெருகச் செய்து விடுகிறார் தமது பாட்டுத்திறத்தாலே

**'கல்வியில்லை உரிமையில்லை பெண்களுக்கு**
**கடைத்தேற வழியின்றி விழிக்கின்றார்கள்'**

என்று பெண்களைப் பற்றி பெர்னாட்ஷா கூறுவதாகப் பாடுகிறார். குடும்ப விளக்கில்

**'உவந்தொருவன் வாழ்க்கை சரியாய் நடத்த**
**உதவுமவள் பெரும்பாலும் மனைவி ஆவாள்**
**அவளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான்'**

பெண்ணின் பெருமையினைக் கூறுவதே மையக் கருத்தாகக் கொண்டு கவிதையை வடிவமைத்தார். மகளிரின் இல்லற மாண்பை குடும்பவிளக்கிலும், மகளிர் மாண்பு சரியில்லாத வீடு இருண்ட வீடாகவும் சித்தரிக்கிறார். பெண்கள் விடுதலை என்று சிறுகாப்பியத்தில் பெண்களுக்கு மாமியார் செய்யும் கொடுமைகளைப் புரட்சிக்கவிஞர் படம்பிடித்து காட்டுகிறார். பாவேந்தர் கைம்மை நோன்பினைச் சாடுகிறார். வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள் மணவாளன் இறத்தல்பின் மணத்தல் தீதோ? என்ற கேள்வினைத்; தொடுகிறார்? வாடாத பூ, உலவத் தென்றல் பசியாத நல்வயிறு இவ்வுலகில் இல்லை என்ற பதிலினைத் தருகிறார். கோரிக்கையற்று கிடக்குது வேரிலே பழுத்த பலா என்று கைம்மை கொடுமையினை எடுத்துரைக்கிறார்.

**பாவேந்தரும் ஆத்திசூடியும்** :

புதிய காலத்தின் குரலாக உதய காலத்தின் ரேகையாய் காலத்தின் தேவையறிந்து குழந்தைகளைச் சிகரத்தில் சஞ்சரிப்பதற்காக புதிய ஆத்திச்சூடி படைத்தார். அதன் மூலம் கல்வி, கோபம், துணிச்சல், போர், ஈகை, அஞ்சாமை, சுதந்திரம், பேச்சுரிமை, பொதுவுடைமை போன்ற பல பொருட்களை உள்ளடக்கியதாக, நாட்டு விடுதலையையும், சமுதாய முன்னேற்றத்தையும் அடித்தளமாகக் கொண்டு அமைவது. பழமைக்கும் புதுமைக்கும் அழகும் அருமையும் மிக்க வலிய பாலம் ஒன்றை வளமாக அமைத்து தந்தவர். ஆட்சியைப் பொதுமை செய், உடைமை பொதுவே, கைம்மை அகற்று போன்ற வரிகள் வாழ்க்கை நெறிகளைக் குழந்தைகளின் பிஞ்சுப் பருவத்தில் ஆழப்பதியச் செய்பவை. சோர்வு நீக்கு, தெருவெல்லாம் மரம் வளர்;, நைந்தார்க்கு உதவி செய் போன்றவை ஒளிரும் மூன்று தாரக மந்திரங்கள். பழைய பாரத நாட்டைப் பாருக்குள்ளே நல்ல நாடு என்று பாராட்டி, அந்நாட்டில் குத்துவிளக்கினைப் போன்ற குழந்தைகள் சிறந்து விளங்கச் செய்கிறார்.

**முடிவுரை:**

பேசாத தமிழர்களின் உளத்தையெல்லாம் பேச வைத்து தமிழ் உணர்வினை ஊட்டிய தூயவர்! பெண்ணியம் பேசிய சிந்தனையாளர்! மொழியும் நாடும் தேசுறுநற் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த செந்தமிழ்க் கவியரசர்! பகலவனின் கதிர்களுக்குத் தொட இயலாதது எதுவுமில்லை என்பதைப் போலவே முக்காலத்திலும் மனிதனின் வாழ்வியல் சூழலுக்கேற்ப அதன் பொருட்டு ஏற்படும் வாழ்வியல் அனுபவங்களின் அடிப்படையில் எழுதப்படும் கவிதையில் நிறைந்திருக்கும். பாவேந்தரே! நவீன கவிதை உலகின் கவிதா விருட்சம். அவரது கவிதை பூக்கள் உதிர்வது மீண்டும் மலர்ந்து சமூகத்தில் வாழும் மனிதர்களுக்கு உணர்வை வீசும் என்பது முக்காலும் உண்மை. மரத்தின் பூக்கள்

உதிர்வது மீண்டும் மலரவே என்ற மாற்றமில்லா நியதிப்படி பாவேந்தரின்; பொதுவுடைமை பாரதத்தில் தன்னம்பிக்கை ஊட்டி புதிய சமுதாயத்தை உருவாக்குவோம்!

துணைநூற் பட்டியல்

வே.ஆனைமுத்து - பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் – நிமிர் பதிப்பகம் 2023

**பாரதிதாசன் கவிதைகள் – தொகுதி-** திருமகள் நிலையம் - 2015

**குறிஞ்சித்திரட்டு** : பூம்புகார் **பதிப்பகம்** , சென்னை1992

**சஞ்சீவிப் பர்வதத்தின் சாரல் – சாராதா பதிப்பகம் - 2012**

The American College Dictionary

திரு.வி.க. பெண்ணின் பெருமை – திருவரசு புத்தக நிலையம் 2015